
புனித பாசி மரிய மதலேனம்மாள்
மே 25

மே 25

## *புனித பாசி மரிய மதலேனம்மாள் (1566-1607)*

என்றும் கன்னியாக இருப்பதாக இவளது 12-ஆம் வயதில் கடவுளுக்கு வாக்களித்தாள். 14-ஆம் வயதில் ஒரு கன்னியர் மடத்தில் உட்பிள்ளையாக வாழ்ந்து கல்வி கற்கச் சென்றாள். வீட்டுக்குத் திரும்பியதும் கன்னியாஸ்திரியாக உறுதி செய்து கார்மேல் சபையில் சேர்ந்தாள். "சாகாமல் வேதனைப்படுவது" என்பதே இவளது விருது வாக்கியம். உடல் நோயின் போதும் கடுந்தவ முயற்சிகள் செய்வாள். பாவிகள் அவிசுவாசிகள் ஆகியோரின் ஈடேற்றத்திற்காக அனைத்தையும் கடவுளுக்கு ஒப்புக்கொண்டாள். கடவுள் இவளுக்கு அனேக அரிய வரங்களைக் கொடுத்தார். வருங்காரியத்தை முன் அறிவிப்பாள். அப்பொழுது ஆழ்ந்த தாழ்ச்சியடையவளாய் இறைவனிடம் ஒன்றித்து வாழ்ந்து வந்தாள். வாழ்வின் கடைசி மூன்று ஆண்டுகளாக உடலிலும் உள்ளத்திலும் கொடிய உபாதைப்பட்டாள். என்றாலும் இன்னும் அதிக உபாதைகளை அனுப்பும்படி கடவுளை மன்றாடினார். ஏனெனில் சிலுவையில் உயிர்விட்ட இயேசுவை மிக மிக நேசித்தாள். இயேசு பட்டபாடுகளும் வடித்த இரத்தமும், அடைந்த கொடிய மரணமும் எந்த பாவிக்கும் வீணாகக் கூடாது என்று இவள் அடிக்கடி மன்றாடுவாள்.

**சிந்தனை:**

பாவிகளும், அவிசுவாசிகளும் மனந்திரும்பும்படியாக இயேசுவின் திரு இரத்தத்தை அடிக்கடி பிதாவுக்கு ஒப்புக்கொடுப்போம்.

**செபம்:**

நித்திய பிதாவே, பாவிகள் மனந்திரும்ப இயேசுவின் திரு இரத்தத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.